செய்தி வெளியீடு எண்: 56 நாள்: 20–01–2012.

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.பி.வேலுமணி அவர்கள் வருவாய்த்துறையின் சார்பில் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத்திட்டங்கள் பற்றியும், துறையின் முக்கிய நடவடிக்கைகள் பற்றியும் நேரடியாக அதிகாரிகளுடன் கலந்துரையாட தலைமைச்செயலகத்தில் இன்று (20.01.2012) கூட்டம் நடத்தினார்கள்.

இக்கூட்டத்தில் வருவாய்த்துறையின் முதன்மைச் செயலர் திரு.ராஜகோபால்,இ.ஆப., முதன்மைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் திரு.கு.ஞானதேசிகன், இ.ஆப., முதன்மைச்செயலர் மற்றும் நில சீர்திருத்த ஆணையர் திருமதி ஜெயஸ்ரீரகுநந்தன், இ.ஆப., நிலஅளவை மற்றும் நகர்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்புற நிலவரித்துறையின் இயக்குநர் திரு.எஸ் முருகையா,இ.ஆப., மற்றும் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த துணை ஆட்சியர்கள் வருவாய் கோட்டாட்சியர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

குறிப்பாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு மாநிலம் முழுவதும் பெரிதும் வரவேற்பினைப் பெற்றுள்ள புதிய விரைவு பட்டா மாறுதல் திட்டம், விட்டுமனைப் பட்டா வழங்குதல், முதியோர் ஓய்வூதியம், விலையில்லா மிக்சி, கிரைண்டர் மற்றும் மின்விசிறி வழங்கிடும் திட்டம், பள்ளி மாணவமாணவியருக்குத் தேவையான வகுப்புச்சான்றிதழ், இருப்பிடச்சான்றிதழ் மற்றும் வருமானவரிச்சான்றிதழ் ஆகியவற்றை தாம் பயிலும் பள்ளிகளிலே பெறுதல் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள 'புதிய உழவர் பாதுகாப்புத்திட்டம்' ஆகிய திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும், நில நிருவாகம், நில சீர்திருத்தம், நிலஅளவை மற்றும் நகர்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்புற நிலவரித்துறை ஆகிய துறைகளின் பணிகள் குறித்தும் கூட்ட நடவடிக்கைகள் அமைந்தன.

இக்கூட்டத்தில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள், வருவாய்த் துறையின் சார்பில் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத்திட்டங்களின் பயன்கள் அனைத்தும் உரிய மக்களை உரிய நேரத்தில் சென்றடைந்திடும் வகையில் அனைவரும் களப்பணியில் அர்ப்பணித்து சிறப்பாக பணியாற்றி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு

பெருமையினை தேடித்தர வேண்டும் என்று பங்கேற்ற அலுவலர்களை அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**